பக்கங்கள்: 09 விலை : 20/-

காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை 07.06.2020 கதிர் 82

# தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக்குழு கூட்டம் காரசாரமாக தொடக்கம்

## மற்றொரு முன்னாள் எம்பியின் செயல் குறித்து சிறிதரன் காட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் குழுக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்குக் கூடியபோது பொதுத் தேர்தலை இலக்கு வைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரையொருவர் தாக்குவது குறித்து தொடக்கத்திலேயே காரசாரமான விவாதம் எழுந்தது.

2

# கல்முனையில் அங்காடி தீயில் எரிந்து நாசமானது

இன்று பிற்பகல் சம்பவம்



கல்முனை, ஜூன் 7

கல்முனை கோயில் வீதியில் உள்ள தனியார் பல்பொருள் அங்காடி ஒன்று இன்று திடீரென ஏற்பட்ட தீயில் எரிந்து நாசமானது.

பிற்பகல் 3.30 தீ பரவத் தொடங்கியது என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

கல்முனை பொலிஸார் மற்றும் கல்முனை மாநகரசபையின் தீயணைப்பு படையினர் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்தனர்.

2

# உயர்தரப் பரீட்சை திகதி தீர்மானிக்கப்படவில்லை

கொழும்பு, ஜூன் 07

இந்த ஆண்டு நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கான திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லையென்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களைக் கவனத்திற்கொண்டே உயர்தரப் பரீட்சைக்கான திகதி தீர்மானிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இன்று தெரிவித்தார்.

எந்த ஒரு மாணவருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# 1,200 நாளைக் கடந்தும் போராடும்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களினது உறவினர்கள் இன்றும் கவனவீர்ப்பு

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் ஆயிரத்து 200 நாள்களுக்கும் மேலாகப் போராட்டம் நடத்திவரும் நிலையில், இன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் நடத்தினர்.

காலை 11.30 மணியில் இருந்து சில மணி நேரத்திற்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமற்போன தனது மகனைத் தேடி தம்முடன் சேர்ந்து போராடி வந்தவரான சின்னசாமி நல்லதம்பியின் உயிரிழப்புக்கு நியாயம் கேட்டும், அவரது கோரிக்கையை நிறைவேற்ற அரசிடம் வலியுறுத்தியும் இந்தக்

2

# கட்டுவனில் வாள் மீட்பு!



சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளுக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் வாள் மற்றும் கஜேந்திரா கோடரி

2

# தேர்தல்கள் ஆணைக்குழு மீது சேறுபூச ஆளுநரம் தரப்பு முயற்சி

## ஜே.வி.பி. கருத்து


தேர்தல்கள் ஆணைக்குழுவின் மீது சேறு பூச முயற்சிக்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள் என்று கண்டித்துள்ளார் ஜே.வி.பி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க.

அதேநேரம் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று தொலைக்காட்சி ஒன்றில் தெரிவித்த தனிப்பட்ட கருத்துக்களையும் செயற்பாடுகளையும்கூட தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பேராசிரியர் ஹூலின்

2

# பசறையில் விபத்து; ஒருவர் சாவு



கொழும்பு, ஜூன் 07

பசறை நகர மத்தியில் லொறி ஒன்று வீதியில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4 ஓட்டோக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் பசறை அம்பேதன்னகம பகுதியில் வசிக்கும் குருலு குமார என்பவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

2

## வவுனியா, பெரியகாடு நிலையத்தில்

# தனிமைப்படுத்தலில் இருந்த 4 கடற்படையினருக்கு தொற்று

வவுனியா, ஜூன் 07

வவுனியா - பெரியகாடு தனிமைப்படுத்தல் முகாமில் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த கடற்படையினரில் நான்கு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

2



# மலையக மக்கள் முன்னணியிலிருந்து அனுஷா சந்திரசேகரன் இடைநிறுத்தம்

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் மகளான சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் கட்சியிலிருந்து இன்று இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அவர் வகித்த பிரதி செயலாளர் நாயகம் பதவிக்கு, மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினரும் பேராசிரியருமான விஜயச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் விசேட கலந்துரையாடலொன்று இன்று ஹட்டன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான அமரர் சந்திரசேகரனின் மறைவுக்குப் பின் அவரைக் கௌரவப்படுத்தும் வகையில் அனுஷா சந்திரசேகரனுக்குப் பிரதிச் செயலாளர் நாயகம் பதவியை வழங்கினோம். ஆனால், அவர் சுயநலத்துக்காகக் கட்சியின் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டதன் காரணமாக அவரைத் தற்காலிகமாக கட்சியில் இருந்து நீக்கியுள்ளோம் என்று முன்னணியின் செயலாளர் லோரன்ஸ் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண சபை உறுப்பினர் ராஜாராம் உட்பட முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## கட்டுவனில் வாள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட அபாயகரமான ஆயுதங்கள் தெல்லிப்பளை, கட்டுவன் பகுதியில் மீட்கப்பட்டன.

இன்று காலை இராணுவத்தினர் அந்தப் பகுதியில் நடத்திய தேடுதலின் போது பற்றைக் காணிக்குள்ளும் வீடு ஒன்றின் மலசலகூட குழிக்குள்ளும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாள், கோடரி உள்ளிட்ட அபாயகரமான பொருள்கள் இராணுவத்தினரால் தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

## பசறையில் விபத்து;......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றி வந்த லொறி பசறை நகரில் தரித்திருந்து, நேற்றுக் காலை புறப்படத் தயாராகியுள்ளது. இதன்போது லொறியின் எஞ்சின் இயங்க மறுத்தமையால் லொறியைச் சிலர் தள்ளி இயங்கச் செய்ய முயற்சித்துள்ளனர்.

சுமார் 600 மீற்றர் வரை லொறி தள்ளப்பட்ட நிலையில் திடீரென நகர மத்தியில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, வீதியில் பயணித்த ஒருவர் மீது லொறி சாய்ந்துள்ளதுடன் அவர் பதுளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்போது உயிரிழந்துள்ளார்.

விபத்தில் 4 ஓட்டோக்களும் லொறிக்குள் அகப்பட்டு சேதமடைந்துள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் விபத்தில் லொறியின் சாரதி, சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

பசறை பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தனிமைப்படுத்தலில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் 276 பேர் கடந்த மே மாதம் 22ஆம் இரவு பம்பைமடு மற்றும் பெரியகாடு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். பரிசோதனையில் பெரியகாடு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 4 கடற்படையினருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூவருக்கு தொற்றிருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இன்று காலை மேலும் ஒருவரின் பரிசோதனை முடிவிலும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் நால்வரும் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கடற்படை சிப்பாய்களில் 855 பேருக்குக் கொரோனா

## வெளிநாட்டிலிருந்து வந்தவர்களில் 606 பேர் தொற்றுடன் அடையாளம்

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால் அடையாளம் காணப்பட்டவர்களில் 892 பேர் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமானவர்களாவர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதில் 855 பேர் கடற்படையினராவர். அவர்களில் 488 பேர் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்களில் 606 பேர் இதுவரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக்குழு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மாலைப் பத்திரிகை தன்னை மிக மோசமான முறையில் தாக்கி எழுதியிருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தொடக்கத்திலேயே பாய்ந்தார்.

ஒரே கட்சிக்குள் இருந்துகொண்டே இப்படி மற்றவர்களைத் தாக்கி மிக மோசமாக நடந்துகொள்வது மிகக் கீழ்த்தரமான செயல் என்று அவர் சாடினார் என முதற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அந்தப் பத்திரிகையில் எழுதப்பட்டவற்றை தவறென வாதிடுவதற்கான ஆதாரங்களையும் அவர் முன்வைத்து கோபத்தோடு இரைந்தார்.

இதனால் கூட்டம் தொடக்கத்திலேயே பரபரப்பானது. எனினும் நிலைமையை ஒருவாறு சமாளித்த தலைவர் மாவை சோ. சேனாதிராசா, மாவட்டக் குழு உறுப்பினர்களின் கவனத்தை பொதுத் தேர்தலின் பக்கம் திருப்பினார்.

தேர்தலை எப்படி எதிர்கொள்வது, மக்களின் மனநிலை என்ன என்பது தொடர்பில் பின்னர் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

## காணாமல் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சின்னசாமி நல்லதம்பியின் உருவப் படம் தாங்கிய பதாதையை ஆர்ப்பாட்டகாரர்கள் ஏந்தியிருந்தமையுடன், உருவப்படத்திற்கு மலரஞ்சலியும் செலுத்தி கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

வடக்கில் பல வருட காலமாகக் காணாமற் போனவர்களின் உறவினர்கள், தங்களது பிரச்சினைக்குத் தீர்வினை வழங்குமாறு, மாறி மாறி வரும் அரசுகளிடம் கோரி தொடர்ந்து போராட்டம் செய்து வருகின்றனர்.

## தேர்தல்கள் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தையடுத்து அவரை மையப்படுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையை ஆளும் பொது ஜன பெரமுன கேள்விக்குட்படுத்தி வருகின்றது.

பெரமுனவின் தலைவர்கள் பேராசிரியர் ஹூலைக் கடுமையாக விமர்சிப்பதுடன் ஆணைக்குழுவின் மீதும் கடும் விமர்சனங்களைத் தெரிவிக்கின்றனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே பிமல் ரத்நாயக்க, தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனத்தன்மையுடன் செயற்படவில்லை என்று கூற வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு (ஆட்சியாளர்களுக்கு) உள்ளது என்று தெரிவித்தார்.

இதனால், தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அல்லது பேராசிரியர் ஹூலில் ஏதாவது ஒரு குறையை, உயர்த்திப் பிடிக்கவே ஆளும் தரப்பு முயற்சி செய்து வருகிறது.

இந்த செயற்பாட்டை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனத்தன்மையுடன் செயற்படுமானால், அது ஜனநாயகத்தை பாதுகாக்கும் வழிவகை என்பதே எமது கருத்து என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 941 பேர் குணமடைவு; 862 பேர் சிகிச்சையில்

## 70 பேர் கண்காணிப்பில்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 50 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 941 ஆக உயர்வடைந்துள்ளது.

இதுவரை கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 1,814 பேரில் தற்போது 862 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

இதேவேளை, வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 70 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கல்முனையில் அங்காடி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீ மேலும் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு அணைக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். அது பற்றிய விசாரணைகளைக் கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அமைச்சர் டக்ளஸின் முயற்சி

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கழிந்து விட்டன.

துப்பாகிகள் வெடிப்பதும், பீரங்கிகள் முழங்குவதும், பல்குழல் ஏவுகணைகள் கனல்வதும் நின்று விட்டன என்பது உண்மைதான். இனவாத யுத்தத்தில் யுத்தம் முடிந்தாலும், இனவாதம் மோசமாகத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

யுத்தத்தில் இலங்கை அரச படைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளும்தான் பொருதினர். புலிகளைப் பொறுத்தவரை முழுவதும் தமிழ் மறவர்கள்தான். அரசுத் தரப்பிலும் நிலைமை அது போன்றதுதான். இலங்கையின் சகல இனத்தவர்களையும் கொண்டதுதான் அரச படை என்று கூறினாலும், பெரும்பாலும் – ஏன் முற்று முழுதாக – அது சிங்களவர்களையும் கொண்ட படையாகவே இருந்தது; இருக்கின்றது.

அதனால்தான், இலங்கை இராணுவத்தை இன்னும் தமிழ் மக்கள் 'சிங்கள இராணுவம்' என்ற யதார்த்தப் பெயரில் அழைக்கின்றார்கள்.

அரசுப் படைகளில் மாத்திரம் அல்லாமல் அரசின் ஒவ்வொரு அணுகுமுறையிலும் அந்த பௌத்த, சிங்கள மேலாதிக்கப் போக்கு மாறவில்லை.

அந்த சிங்களப் போக்கு இப்போது கிழக்கு மாகாணத் தொல்லியல் ஜனாதிபதி செயலணியிலும் முழு அளவில் வெளிப்பட்டு நிற்கின்றது.

கிழக்கில் தமிழ் பேசும் மக்கள்தான் – தமிழரும் முஸ்லிம்களும்தான் – மூன்றில் இரண்டு பங்கினர். ஆனால் அவர்கள் அனைவரையும் அடியோடு ஒதுக்கி விட்டு கிழக்குத் தொல்லியல் விடயங்களைக் கவனிக்க என்ற விசேட அதிகாரங்களுடன் – அதுவும் முன்னாள் இராணுவ ஜெனரலான பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் – இந்த உயர்மட்ட செயலணி அமைப்பது என்பது கிழக்கிலங்கையை பௌத்த மயப்படுத்தும் முழுப் பேரினவாத நடவடிக்கை என்பது வெளிப்படையானது.

*"புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் முதலில் அரசுப் படைகள் கிழக்கு மாகாணத்தைத் தான் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன. அதன் பின்னர்தான் அவை வடக்கின் பக்கம் முழுப் பலத்துடனும் வீச்சுடனும் கவனத்தைச் செலுத்தின. அதுவே முழு இராணுவ வெற்றியை அவற்றுக்குப் பெற்றுத் தந்தன"* – என்று சுட்டிக்காட்டுகின்றார் பிரபல ஆய்வாளர் கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன்.

*'எல்லாவற்றையும் சிங்கள மயப்படுத்தும்'* திட்டத்தின் இந்த முறைமைதான் இப்போது கட்டவிழ்கின்றதோ என்று அஞ்சுகின்றார் அவர்.

*"நாட்டின் குறைந்தது பத்துத் தமிழ் தொல்பொருள் ஆய்வாளர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் மட்டக்களப்பை ஒட்டியே பணி புரிகின்றனர்.*

*"பொருத்தமான வரலாற்றுக் கதை ஒன்று [உருவாக்குவதன்] மூலம், நாட்டின் பெரும்பான்மையினரின் நலனைப் பேணி மேம்படுத்தும் தற்போதைய தேசிய திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த நடவடிக்கை கட்டவிழ்வதே பிற இனங்களைச் சேர்ந்த நிபுணர்கள் இதற்குள் சேர்க்கப்படாமைக்குக் காரணமாக இருக்கலாம்"* – என்று புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளரும் களனிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான ஜகத் வீரசிங்க கூறுகின்றார்.

தமிழர் தாயகத்தை சிங்கள, பௌத்த மயப்படுத்தும் பேரினவாதக் கொடூரத்தின் படுமோசமான நடவடிக்கையாகவே இது முன்னெடுக்கப்படுகின்றது என்பது சந்தேகத்துக்கு இடமின்றிக் கண்கூடானது.

அரசுத் தரப்புடன் சேர்ந்து நிற்கும் தமிழ்க் கட்சிகள், பிரமுகர்களுக்கு இந்த உண்மை வெட்ட வெளிச்சமாக விளங்கும். ஆனால் அது தெரியாதவர்கள் போல – அது தமது கவனத்தில் படாதமை போல – அவர்கள் நடிக்கின்றார்கள்.

தூங்குபவர்களை எழுப்பலாம். தூங்குபவர்கள் போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது.

கிழக்கில் ஆளும் தரப்புக்கு – ஜனாதிபதிக்கு – பல்லாக்குத் தூக்கும் கருணா, வியாழேந்திரன், அருண் தம்பிமுத்து போன்றோர் இவ் விடயத்தில் எதுவும் நடவாதமை போல செய்படுவது, தூங்குவது போல நடிக்கும் செயல்தான்.

வடக்கைப் பொறுத்தவரை அரசுக்கு முண்டு கொடுத்து, அதன் மூலம் அமைச்சுப் பதவியை வளைத்துப் போட்டிருக்கும் டக்ளஸ் தேவானந்தா உண்மையில் ஒரு முன்னாள் போராளி. பௌத்த, சிங்கள மயப்படுத்தலின் கோரமுகத்தை நன்கு அறிந்தவர்.

தமிழினத்துக்கு எதிரான சிங்களத்தின் இந்த நாசவேலையின் ஆபத்து அவருக்கு இயல்பாகவே புரியும்.

ஆனால் தான் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு எதுவும் செய்ய முடியாத கையறு நிலைமை காரணமாக அவரும் இவ் விடயத்தில் நடிக்க வேண்டித்தான் இருக்கின்றது.

இவ்விடயத்தில் அரசின் போக்கை பீரங்கியாய் முழங்கிக் கண்டிக்க வேண்டும். ஆனால் அவர் மயிலிறகால் தடவிச் சமாளிக்கப் பார்க்கின்றார்.

கிழக்குத் தமிழர்களின் கருத்தை மேற்படி செயலணி உள்வாங்குவதற்கான ஒரு பொறி முறையை அரசிடம் அவர் கேருவது வெறும் கண்துடைப்பு நாடகம். அதில் பயனில்லை.

வெறுமனவே கருத்தைச் செவிமடுப்பதில் அர்த்தமில்லை. எடுக்கும் தீர்மானங்களில் அந்தக் கருத்துகள் உரிய முறையில் – நீதியான வகையில் – தாக்கம் செலுத்த வேண்டும்.

கிழக்கில் மூன்றில் இரண்டு பங்கு தமிழ் பேசும் மக்கள் என்பதால் அப்பிரதேசத்தின் தொல்லியல் முடிவுகளை எடுக்கும் ஆளணியில் அதே விகிதாசாரத்தில் நிபுணர்களைச் சேர்ப்பதுதான் பொருத்தமானது என்பதை வெளிப்படையாயும், திட்டவட்டமாகவும், தெளிவாகவும் ஆட்சித் தரப்புக்கு அமைச்சர் டக்ளஸ் இடித்துரைக்க வேண்டும். அதுதான் சரியானது.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களை முழுமையாக விழுங்கும் பேரினவாதத்தின் நகர்வை பைசர் முஸ்தபா அறிவாரா?

## சீற்றத்தோடு கேள்வி எழுப்புகிறார் அசாத் சாலி

வடக்கு, கிழக்கு மாகாணத்தை முழுமையாக விழுங்குவதற்கு வரிந்துகட்டிக்கொண்டிருக்கும் பேரினவாதிகளின் நகர்வுகளை முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா அறிவாரா?

– இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் முஸ்லிம்கள் மொட்டுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டியது தார்மீகக் கடமையென கூறியிருக்கும் பைசர் முஸ்தபா, தான் அங்கம் வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் மொட்டுக் கட்சிக்குள் பின்னி, அதற்குள் முடிச்சுபோட்டு, போலியான நியாயங்களால் தனது கருத்துக்கு வலு சேர்த்திருப்பது வெட்கக்கேடானது என்றும் அசாத் சாலி குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி தேர்தலின் பின்னர், முஸ்லிம் சமூகத்துக்கு வெளிப்படையாக இழைக்கப்படும் அநியாயங்களைக் கண்டும் காணாதது போன்று கருத்துக்களைக் கூறும் பைசர் முஸ்தபா, 'பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பது' போன்ற நிலைக்கு இறங்கியுள்ளார்.

ஜனாஸா எரிப்பு விடயத்தில் சமூகத்துக்கு இழைக்கப்பட்டு வரும் அப்பட்டமான அநியாயங்களை பைசர் முஸ்தபா போன்றவர்கள் தெரிந்திருந்தும், அரச கூட்டங்களில் அவர் உயர்மட்டத் தலைவர்களால் அவமானப் பட்டிருந்தும், இன்னும் இந்தக் கூட்டத்துக்காக வக்காலத்து வாங்குவதன் உள் நோக்கம்தான் என்ன?

சிறந்த பரம்பரையில் பிறந்த பைசர் முஸ்தபா, தனது நெஞ்சிலே மீண்டும் ஒருமுறை கைவைத்து, மனச்சாட்சியைத் தொட்டுப் பார்க்க வேண்டும். தனது எதிர்கால நன்மைக்காக இன்னும் ஒருவரின் மகுடிக்கு இவர் ஆடுவது வேதனையானது.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கோ, தேசியப் பட்டியல் பதவிக்கோ சந்தர்ப்பம் தராத சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பெரமுன கூட்டத்துக்காக, இவர் ஏன் இவ்வாறு திடீரெனப்பரிந்து பேசுகின்றார் எனத் தெரியவில்லை.

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி பதவியில் அமர்த்திய முஸ்லிம்கள் உள்ளடங்கிய சிறுபான்மை சமூகத்துக்கு, பச்சைத் துரோகமிழைத்த முன்னாள் ஜனாதிபதியின் கட்சிக்காக இன்னும் ஒட்டியிருந்து, நாக்கூசாமல், பைசர் முஸ்தபா அந்தக் கட்சிக்கு துதிபாடுவது ஏன்?

கிழக்கு மாகாணத்தில் பௌத்த சின்னங்களைப் பாதுகாப்பது என்ற பெயரில், தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வரலாற்று பூமியைக் கபளீகரம் செய்ய எடுக்கப்படும் முயற்சிகளையும், வடக்கு, கிழக்கு மாகாணத்தை முழுமையாக விழுங்குவதற்கு வரிந்துகட்டிக்கொண்டிருக்கும் பேரினவாதிகளின் நகர்வுகளையும் பைசர் முஸ்தபா அறிவாரா? என அசாத் சாலி கேள்வியெழுப்பியுள்ளார்.

# கழிவு நீர் தேங்கி வரும் பிரச்சினைக்கு நேற்று தற்காலிக தீர்வு தந்த பொலிஸ்








கல்முனை மாநகர சபையின் எல்லைக் குட்பட்ட மருதமுனை - பெரியநீலாவணை இஸ்லாமிக் றிலீப் வீட்டுத் திட்டத்தில் கழிவுநீர் தேங்கிக் கிடப்பதால் இங்கு வசிக்கும் மக்களும் அயலவர்களும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக இங்கு வசிக்கும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த 16 வருடகாலமாகத் தாம் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நீண்டகாலமாக இங்கு வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிவதற்காக கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எச்.சுஜித் பிரியந்த தலைமையிலான குழு இன்று குறித்த வீட்டுத்திட்டத்திற்கு நேரில் வருகை தந்து பார்வையிட்டது.

இது தொடர்பில் கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடித்தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டமையுடன் பொலிஸாரின் உதவியுடன் குறித்த பகுதி தற்காலிகமாகச் சுத்தம் செய்தும் கொடுக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல்கோள் பேரிடரால் முற்றாகப் பாதிக்கப்பட்டுத் தமது உறவுகளையும் இருப்பிடங்களையும் இழந்த மருதமுனை மற்றும் பெரியநீலாவணை மக்களுக்காக 'இஸ்லாமிக் றலீப்' வீட்டுத் திட்டத்தில் தற்போது சுமார் 108 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வீட்டுத்திட்டத்தில் இருந்து நாளாந்தம் வெளியேறும் மலசலகூட கழிவு, குழியலறைக் கழிவு நீர், சமையலறை கழிவு நீர் என்பன முறையாக வெளியேறுவதற்கான வடிகான் வசதிகள் செய்யப்படாமையால் அவை அருகிலேயே தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துகின்றன.

## யானையை அடுத்துப் பசு!

கேரளாவில் வெடிமருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த அன்னாசிப் பழத்தைச் சாப்பிட்ட யானை ஒன்று சாவடைந்திருந்த நிலையில் இந்தியாவின் இமாச்சலப் பிரதேசத்தில் பசு ஒன்றும் இவ்வாறு வெடி விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

உணவுப்பொருளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து வெடித்ததில் அதைச் சாப்பிட முற்பட்ட் பசுவின் வாய் சிதைந்துள்ளது. கடந்த மே மாதம் 25ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இமாச்சலப் பிரதேசத்தின் பிலாஸ்பூர் பகுதியைச் சேர்ந்த குர்தியால் சிங் என்பவருக்குச் சொந்தமான பசுவே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்கு அருகில் வைக்கப்பட்டிருந்த கோதுமை உருண்டையைச் சாப்பிட முற்பட்ட போது அதிலிருந்த வெடிமருந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பசுவின் உரிமையாளர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில், பக்கத்து வீட்டைச் சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தானியங்களை நாசமாக்க வருகின்ற காட்டுப் பன்றிகளுக்கு வைக்கப்பட்ட வெடி பொருளைப் பசு தவறுதலாக சாப்பிட்டதால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பிலாஸ்பூர் பகுதியைச் சேர்ந்த கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர் ஒருவர் கூறியுள்ளார்.

## 'சிறப்பு கொரோனா' கட்டணம் நிறுத்தம்

கொரோனா முடக்கத்தால் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக மதுபானங்கள் மீது சிறப்புக் கொரோனாக் கட்டணத்தை அறிவித்தது இந்திய அரசு.

தற்போது அந்தக் கட்டண அறவீட்டை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் மாநில அரசுகள் அதிக அக்கறை காட்டிய நிலையில், மத்திய அரசு போதுமான அளவு நிதி கொடுத்து உதவவில்லை என்று விமர்சனங்கள் எழுந்ததன் காரணமாக மாதுபானங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டது.

'சிறப்பு கொரோனா கட்டணம்' எனக் குறிப்பிட்டு (சுமார் 70 சதவீதம்) புதிய கட்டணத் தொகையை விதித்தது. இந்த நிலையில் தற்போது அந்தச் சிறப்புக் கட்டண அறவீட்டைத் திரும்பப் பெற்றுள்ளது.

## இந்தியாவில் அதிகரிக்கிறது கொரோனா! உலக சுகாதார ஸ்தாபனமும் எச்சரிக்கை

இத்தாலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொரோனாத் தொற்றில் இந்தியா முன்னிலைக்கு வந்துள்ளதாக நேற்றைய தினம் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் இந்தியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பின் நிபுணர்களில் ஒருவரான மைக்கல் ரியான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நாளுக்கு நாள் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. கடந்த சில தினங்களாக இந்தியாவில் ஒரு நாளில் மட்டும் 9ஆயிரம் பேருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவில் கொரோனா அதிகரித்து வருவது குறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர் மைக்கல் ரியான் கூறும்போது, 'இந்தியா ஊரடங்கைத் தளர்த்தினால் அபாயக் கட்டத்தை அடையும். இந்தியாவில் தொற்று அதிவேகமானதாக இல்லை.

ஆனால், அது அதிகரித்து வருகிறது. தொற்றுநோயின் தாக்கம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வேறுபட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கொரோனா தொற்றுக்கு இதுவரை 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டும், 6 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சாவடைந்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பாண்டியர் காலச் சிற்பம் கண்டுபிடிப்பு

தமிழகத்தின் மாங்குடிக்கு அருகே உள்ள பெருமாள்பட்டி கிராமத்தில் ஆவுடையாபுரம் பகுதியில் உள்ள கருப்பையா என்பவரின் நிலத்தை உழுதபோது 6 அடி உயரமான கொற்றவைச் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழகத்திலேயே முதன் முதலாக மான்வாகனத்தைத் கொண்ட கொற்றவை சிற்பம் இது என்று தெரிவிக்கப்படுகிறது. தற்போது சென்னை அரசு அருங் காட்சியகத்தில் இந்தச் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

வடஇந்தியாவில் சிங்கம் அல்லது புலியை வாகனமாகக் கொண்ட கொற்றவைச் சிற்பங்களே உள்ளன. விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியரும், தொல்லியல் ஆய்வாளருமான முனைவர் போ. கந்தசாமியே இந்தத் தகவலை வெளியிட்டார்.

தமிழகத்தில் கொற்றவையின் வாகனமாகக் கலைமான் உள்ள சிற்பம் அரிதானது. இதன் உருவ அமைப்பைக் கொண்டு பார்க்கையில், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாண்டியர் காலத்தைச் சேர்ந்த கலை நயமிக்க சிற்பமாக இதைக் கருத முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## செப்ரெம்பர் நடுப் பகுதியில் கொரோனா முடிவுக்கு வரும்

### இந்திய மருத்துவ வல்லுநர்கள் தெரிவிப்பு

இந்தியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் முடிவுக்கு வரும் என்று இந்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தில் பணியாற்றும் மருத்துவவல்லுநர்கள் மேற்கொண்ட கணிதரீதியிலான ஆய்வில் கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




பொதுச் சுகாதாரத் துறை இயக்குநரகத்தின் துணை இயக்குநர் மருத்துவர் அனில் குமார், இணை இயக்குநர் மருத்துவர் ரூபாலிராய் ஆகியோர் இருவருமே இந்தஆய்வைவெளியிட்டுள்ளனர்.

இந்தஆய்வுக்கு 'பெய்லிகணித மாதிரியை' இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பிட்ட காலத்தில், கொரோனாத் தொற்றுவீதம், குணமடைந்து வீடு திரும்பியோர் வீதம் ஆகியவற்றுடன், இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாக வைத்து இது கணக்கிடப்பட்டது.

இயற்கைச் சீற்றங்கள், மக்கள் கூட்டமாக நகர்தல், நாட்டில் நடக்கும் முக்கிய நிகழ்வுகள், பன்னாட்டு நிகழ்வுகள் ஆகியவை இந்த மாதிரியில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## தாராவியில் 1899!

இந்தியாவின் மும்பை நகரிலுள்ள தாராவி குடிசைப்பகுதியில் கொரோனா வைரசால் பாதிப்பு அடைந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 899 ஆக அதிகரித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய குடிசைப் பகுதியான தாராவியில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் அங்கு கொரோனா தொற்று உறுதியானோர் எண்ணிக்கை 2 ஆயிரத்தை நெருங்க உள்ளது.

தாராவியில் கொரோனாத் தொற்றுக் காரணமாகச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 71பேர் என அந்த மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## புலிகள் குறித்து தவறான தகவல்

### வனத்துறை அமைச்சகம் விளக்கம்



கடந்த 8 ஆண்டுகளில் வேட்டையாடுதல் உட்பட்ட காரணங்களால் இந்தியாவில் 750 புலிகள் சாவடைந்துள்ளன எனச்செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், இந்தியாவில் புலிகளின் இறப்பு எண்ணிக்கையைப் பற்றி ஊடகங்களில் தவறான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன எனக் கூறிக் கடந்த எட்டு ஆண்டுகளில் நிகழ்ந்த புலிகளின் இறப்புப் பற்றி இந்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

அந்த விளக்கத்தில் தேசிய புலிகள் பாதுகாப்பு அமைப்பு மூலமாக மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளால், அழிவின் விளிம்பில் இருந்த புலிகள் தற்போது மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. 2006, 2010, 2014, 2018 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆய்வுகளில் புலிகளின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 6 சதவிகிதமாக இருந்தது. இது நல்ல கொள்திறனாகும்.

2012ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில், புலிகளின் இறப்பு எண்ணிக்கை சராசரியாக 94 ஆக இருந்தது. புலிகளின் விரைவான வளர்ச்சி விகிதம் இதைச் சமன் செய்கிறது. மேலும் புலிகள் திட்டத்தின் செயலக்கத்தால் புலிகள் கொல்லப்படுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்து மீறிக் கொல்பவர்கள் பிடிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

## திருப்பதி குறித்து அவதூறு சிவகுமார் மீது வழக்கு பதிவு

திருப்பதிக் கோயில் குறித்து அவதூறு பேசினார் என நடிகர் சிவகுமார் மீது திருமலைப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:–

இலக்கியம், ஆரோக்கியம், இல்லறம் என்கிற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய நடிகர் சிவகுமார், 'கடவுள் இருக்கிறார் என நினைத்தீர்களானால் சுனாமி ஏன் வந்தது? கோயிலில் இன்னமும் தீண்டாமை உள்ளது? ஏழை, பணக்காரன் பாகுபாடு உள்ளது. திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கோடி கோடியாகக் காணிக்கை கொட்டுகிறது. காட்பாடியிலிருந்து 48 நாள் விரதமிருந்து, நடந்தே திருப்பதிக்குச் செல்கிறான் ஒரு ஏழை பக்தன். இவன் நீண்டவரிசையில் காத்திருந்து பின்னர் தான் சாமியைத் தரிசனம் செய்கிறான்.

அங்கு பெரிய மூங்கில் குச்சியில் 'ஜரகண்டி.. ஜரகண்டி' எனஅடித்து விரட்டுகிறார்கள். அதுவேஒரு பணக்காரன், மனைவிக்குத் தெரியாமல் வேறு பெண்ணை அழைத்துக் கொண்டு திருமலைக்கு சென்று, விடுதி அறையில் தங்கி, மது போதையில் இருந்து விட்டு, காலையில் குளிக்காமல் கோயிலுக்குள் சென்றால், அவனுக்குப் பூரண கும்ப மரியாதை அளிக்கப்படுகிறது' என்றிருந்தார்.

இதன் பின்னர் திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருப்பதி கோயில் குறித்து மிகவும் கண்டிக்கத்தக்க வகையில்பேசிப் பக்தர்களுக்கும் தேவஸ்தானத்தின் பெருமைக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருப்பதால், இவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றுள்ளது.

# காணொலியை நீக்கியது சட்டவிரோதமானது அல்ல

## ட்ரம்ப்புக்குக் கீச்சகம் பதில்

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்ட காணொலியைக் கீச்சகம் நீக்கியது. காப்புரிமை விதிமீறல் காரணமாக நீக்கப்பட்டது என்றும், அந்த நீக்கம் சட்ட விரோதமானதல்ல என்றும் கீச்சகத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஜாக் டார்ஸி தெரிவித்தார். அமெரிக்காவில் பொலிஸாரின் பிடியில் சாவடைந்த ஜோர்ஜ் ஃபிளாய்ட்டுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக டொனால்ட் ட்ரம்ப், கீச்சகத்தில் பகிர்ந்த காணொலியே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது. இந்தக் காணொலி நீக்கம் குறித்து ட்ரம்ப் தெரிவிக்கையில், அமைதியாகப் போராட்டம் நடத்துபவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் எனது காணொலியைக் கீச்சகம் நீக்கியுள்ளது - என்றார். இதற்குப் பதிலளித்த ஜாக் டார்ஸி, அந்தக் காணொலியை நீக்கியதற்கான காரணம் டிஜிற்றல் மில்லினியம் காப்புரிமைச் சட்டத்தின்படி, அதன் உரிமையாளர் முறைப்பாடு அளித்திருந்தார் என்று குறிப்பிட்டார். அமெரிக்காவில் நடக்கும் போராட்டங்களுக்குத் தீவிர இடதுசாரிக் குழுக்களே காரணம் என்று சொல்லும் ட்ரம்ப்பின் காணொலி ஒன்றை காப்புரிமை மீறல் காரணமாகக் கீச்சகமும், முகநூலும் முடக்கியமை குறிப்பிடத்தக்கது.

### டிஜிற்றல் மில்லினியம் காப்புரிமைச் சட்டம்

அமெரிக்காவின் டிஜிற்றல் மில்லினியம் காப்புரிமைச் சட்டம் 1998 இன் படி, காப்புரிமை விதிகளை மீற வகைசெய்யும் தொழில்நுட்பம், கருவிகள் மற்றும் அதற்கான சேவைகளை உருவாக்குதல், பரப்புதல் என அனைத்தும் குற்றமாகக் கருதப்படும். காப்புரிமை மீறப்படாமல் இருந்தாலும் அதற்கு வழிவகை செய்வதே குற்றம் என்று இந்தச் சட்டம் சொல்கிறது.



# பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக களமிறங்கினர் இஸ்ரேலியர்கள்

## நெதன்யாகுவின் திட்டத்தை எதிர்த்துப் போராட்டம்



இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் சில பகுதிகளில் தமது நாட்டு இறையாண்மையை விரிவுபடுத்துவதற்கு இஸ்ரேல் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெதன்யாகு சில திட்டங்களை முன்னெடுத்துள்ளார். அவருடைய இந்தத் திட்டத்தை எதிர்த்துப் பல்லாயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் போராட்டம் நடத்தினர். முகக் கவசங்களை அணிந்தவாறும், ஒருவருக்கொருவர் இடைவெளிகளைப் பேணியவாறும் அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இணைக்க வேண்டாம், ஆக்கிரமிக்க வேண்டாம், சர்வாதிகாரத் தலைவர்களுக்கு ஆதரவாக நிற்பதும், ஒவ்வொரு பாலஸ்தீனியருக்கும், இஸ்ரேலியருக்கும் அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவதும் நம் அனைவரினதும் பொறுப்பாகும் என்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினர். சிலர் பாலஸ்தீனக் கொடிகளைத் தமது கைகளில் அசைத்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தை இஸ்ரேலின் இடதுசாரி குழுக்கள் ஏற்பாடு செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

1967ஆம் ஆண்டு மத்திய கிழக்குப் போரில் பாலஸ்தீனப் பகுதிகளான மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் மற்றும் காசா பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. இந்தப் பகுதிகளில் சுதந்திரமான அரசு நிலவுவதைப் பாலஸ்தீனர்கள் விரும்புகிறார்கள். இஸ்ரேலின் குடியேற்றங்களையும் மேற்குக் கரையில் உள்ள ஜோர்டான் பள்ளத்தாக்கையும் இணைப்பதற்கான தனது திட்டத்தை ஜூன் 1ஆம் திகதியன்று நெதன் யாகு அறிவித்தார். இதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கின்றது. பாலஸ்தீனர்கள் இந்தத் திட்டத்தை நிராகரிக்கின்றனர். இந்த நிலையிலேயே இஸ்ரேலிலும் நெதன்யாகுவின் திட்டத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

# 12ஆவது நாளாக தொடர்கின்றன போராட்டங்கள்!

அமெரிக்காவில் பொலிஸாரின் பிடியில் சாவடைந்த ஜோர்ஜ் பிளாய்ட்டுக்கு நீதி கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 12ஆவது நாளாகத் தொடர்கிறது. அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் திரண்ட மக்கள் இனம், நிறம் கடந்து ஒன்றுகூடி இனவெறிக்கு எதிராகவும், பொலிஸ் வன்முறைக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். கப்பிடோல், இலிங்கன் நினைவகம், லஃபாயெட்டி பூங்கா ஆகிய இடங்களில் போராட்டக்காரர்கள் குவிந்தனர். இந்த இடங்களில் இருந்து அமெரிக்க அதிபரின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகைக்குச் செல்லும் வீதிகளைப் பொலிஸார் மறித்துவைத்தனர். பல்வேறு இன மக்களும் இந்தப் போராட்டங்களில் பங்கேற்றனர். பலர் குடும்பம் குடும்பமாக, குழந்தைகளோடு போராட்டத்தில் பங்கேற்றனர் எனவும் உறுதியான மன எழுச்சி நிலவியதாகவும், 'நீதி இல்லையேல் அமைதி இல்லை' என்பது உள்ளிட்ட முழக்கங்கள் எழுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அமெரிக்காவைத் தாண்டிய போராட்டங்கள்

பிரிட்டன் தலைநகர் லண்டனின் நாடாளுமன்றச் சதுக்கத்தில் நடந்த போராட்டத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். கொரோனா தொற்று அதிகரிக்கக்கூடும் என்ற அச்சத்தில் மக்கள் ஒன்றுகூடவேண்டாம் என்று பிரிட்டன் அரசு விடுத்த வேண்டுகோளையும் மீறி இந்தப் போராட்டம் நடந்தது. ஆஸ்திரேலியாவில் சிட்னி, மெல்போர்ன், பிரிஸ்பேன் ஆகிய நகரங்களில் நடந்த போராட்டங்களில் ஆஸ்திரேலியாவின் தொல்குடிகள் நடத்தப்படும் விதம் குறித்த விமர்சனங்கள் எதிரொலித்தன. பிரிட்டன், ஆஸ்திரேலியாவில் மாத்திரமன்றி பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், ஈரான், கனடா உள்ளிட்ட பல நாடுகளில் இந்தப் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

# கறுப்பினக் குழந்தை சாவு பிரேசிலிலும் போராட்டம்!







அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டமையைக் கண்டித்துப் போராட்டங்கள் நடந்துவரும் நிலையில், பிரேசிலிலும் அவ்வகைப் போராட்டம் ஒன்று வெடித்திருக்கிறது. கறுப்பினத்தைச் சேர்ந்த 5 வயதுப் பிள்ளை ஒன்று உயரமான கட்டடத்தில் இருந்து விழுந்து இறந்ததன் காரணமாகப் பிரேசிலில் இந்தப் போராட்டம் வெடித்துள்ளது. பிரேசிலின் ரெசைப் என்ற நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இது குறித்துத் தெரியவருவதாவது:

வெள்ளையினத்தவர் வீடு ஒன்றில் பணி செய்துவருகின்ற கறுப்பினப் பெண் ஒருவர் அந்த வீட்டு நாயை நடைப்பயிற்சிக்காகக் கூட்டிச்செல்கிறார். தனது 5வயது மகனை வெள்ளையின வீட்டுக்காரப் பெண்ணிடம் பார்த்துக் கொள்ளுமாறு விட்டுச் செல்கிறார். அந்தக் குழந்தையை மின்தூக்கிக்குள் (லிப்ட்) வெள்ளையினப் பெண் தனியாக விட்டு விட்டு வெளியேறியதும் அந்தக் குழந்தை அங்குள்ள சுவரிலிருந்த ஜன்னலில் ஏறி 9ஆவது மாடியிலிருந்து விழுந்து இறந்துள்ளது. இது குறித்த மறைகாணிக் காணொலி வெளியாகியுள்ளது. இந்த நிலையில் நிறவெறிக்கு எதிரான போராட்டம் அங்கு உருவெடுத்துள்ளது. கறுப்பின மக்களின் வாழ்க்கையையும் பொருட்டாகக் கருதுங்கள் என்ற வாசகங்களுடன் பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர். குழந்தையை மின்தூக்கிக்குள் தனியாக விட்டுச் சென்றவர் தண்டிக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் அங்கு எழுந்துள்ளன.

# கறுப்பினத்தவருக்கு எவரும் என்போல் உதவியதில்லை

## ட்ரம்ப் பல்டி



என்னைப்போல் கறுப்பின மக்களுக்கு எவரும் உதவவில்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இது குறித்து ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவின் பொருளாதாரம் இன்று மீண்டுள்ளது. வேலை வாய்ப்புகள் வேகமாக அதிகரித்துள்ளன. அமெரிக்க வரலாற்றில் இது சிறந்த சாதனை. நான் அடுத்த அதிபர் தேர்தலில் வெற்றி பெற வேண்டும். அடுத்த நான்கு ஆண்டுகள் இந்தப் பதவியில் தொடர வேண்டும். கடந்த வாரம் நடந்த நிகழ்வைக் கண்டிக்கிறேன். வேறு எந்த அதிபரும் கறுப்பின மக்களுக்கு என்னைப் போல் உதவவில்லை. நான் மேற்கொண்ட பொருளாதார மீளுருவாக்கம் சமூக உறவை மேம்படுத்தி சமத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. அனைத்திலும் அமெரிக்கா முன்னேற்றம் கண்டு வருகிறது. ஜோர்ஜ் ஃபிளாய்ட் மேலே இருந்து நம்மைப் பார்த்து, நம் நாட்டில் சிறப்பான விடயங்கள் நடந்து வருகின்றன, இது நிச்சயம் சமத்துவத்துக்கான நிகழ்வு என்று கூறுவார்" - எனத் தெரிவித்தார். எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொல்லப்பட்ட வணபிதாவின் நினைவுதினம் மட்டக்களப்பில்










மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட அருட் தந்தை சந்திரா பெனாண்டே அடிகளின் 32 வது நினைவேந்தல் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு படுகொலை செய்யப்பட்ட அருட் தந்தை சந்திரா பெனாண்டே அடிகளின் 32ஆவது நினைவேந்தல் புனித மரியாள் பேராலயத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது சமாதானத்தின் காவலன் சமாதியில் நேற்று சனிக்கிழமை மாலை நடந்தது.

தேவலாய பங்கு தந்தை வணபிதா சிலமன் அன்னதாஸ் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட அருட் தந்தையின் உறவினர்கள், வணபிதாக்கள், பொதுமக்கள் நிகழ்வில் கலந்துகொண்டு சமாதியில் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்திலே பங்கு தந்தையாக பணியாற்றிய அருட் தந்தை சந்திரா பெனாண்டே அடிகள் 1988 ஜூன் 6ஆம் திகதி 46 வயதிலே இனம்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒடுக்கப்பட்டோர், அநீதி இழைக்கப்பட்டோர், வறியவர்கள், தேவை நாடி நிற்போர் என முழு சமூகத்துக்குமே சிறப்புப் பணி செய்தவர் துணிந்த ஆளுமையும் நேரியல் சிந்தனையும் இளைஞர்களை உயரியல் சிந்தனையில் நெறிப்படுத்தும் ஆர்வமும் கொண்டவர் கத்தோலிக்கத் திருமறை பணியோடு வாழ்ந்தவர்.

# கிழக்கு மாகாணத்தின் தொல்லியல் ஜனாதிபதி செயலணி தமிழ்பேசும் மக்களின் கருத்துக்களை உள்வாங்க வேண்டும்

## அதற்கான பொறிமுறையை ஜனாதிபதியிடம் கோருகிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு,ஜுன்08

**கிழக்குமாகாணத்திலுள்ள தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்காக அமைக்கப்பட்ட செயலணிக்குழு அவர்களது முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களை உள்வாங்குவதற்குமான பொறிமுறை ஒன்றை உருவாக்கவேண்டும் என ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிடம் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.**



கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் ரீதியிலான பெறுமதி வாய்ந்த இடங்களை அடையாளம் காண்பதற்கும், அவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடங்களை முகாமைத்துவம் செய்வதற்கு பொருத்தமான நடைமுறையை இனங்கண்டு செயற்படுத்துவதற்கும், சட்டரீதியாக அவ்விடங்களை ஒதுக்குவதற்கு தேவையான செயற்பாடுகளை எடுப்பதற்கும் மற்றும் அவ்விடங்களின் கலாசார பெறுமதிகளை பாதுகாத்து அவ்மரபுரிமைகளை மேம்படுத்துவதற்கான சிபார்சுகளை சமர்ப்பித்தலுக்குமாக ஜனாதிபதியின் ஆணையின் பிரகாரம் அவரின் செயலாளர்பி.வி. ஜெயசுந்தர அவர்களினால் ஜனாதிபதி செயலணி ஒன்று அமைக்கப்படுவதாக அண்மையிலவர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் குறித்த செயலணியின் நடவடிக்கைகளின்போது கிழக்கில்வாழும் தமிழ் பேசும் மக்களும் தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிக் வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அக்கடிதத்தில் –

கிழக்குமாகாணத்திலுள்ள தொல்பொருள் மரபுரிமைகளை முகாமைசெய்வதற்காக தங்களால் அமைக்கப்பட்ட குழு அதன் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, அங்கு வாழும் தமிழ் பேசும்மக்களின் கருத்துக்களையும் உள்வாங்குவதற்குமான ஓர் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# மன்னார் கிராமங்களைச் சேர்ந்த 57 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டனர்!

மன்னார் – பேசாலை மற்றும் வங்காலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 57 பேர் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் றோய் பீரிஸ் தெரிவித்தார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி சட்ட விரோதமாக நாட்டிற்குள் இந்தியாவில் இருந்து வருகை தந்த நபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர்களுக்கு நேரடியாக உதவி செய்த ஐந்து நபர்கள் பொலிஸார் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு புனானை தனிமைப் படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் இவர்களுடன் தொடர்புடைய பேசாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த 12 குடும்பத்தைச் சேர்ந்த 52 நபர்கள் அவர்களின் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மக்கள் அச்சப்படத் தேவையில்லை.

இது பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தொடர்பாக நாங்கள் மேற்கொள்ளும் சாதாரண நடவடிக்கை.

குறித்த நடவடிக்கை ஊடக இவர்கள் தொடர்ச்சியாக 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டு அவதானிக்கப்படுவார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளின் போது பொது மக்கள் மிக அவதானமாக நடந்து கொள்ள வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

இவ்வாறான சட்ட விரோத ரீதியாக எமது நாட்டுக்குள் உட்பிரவேசிக்கும் மக்களை குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் மக்கள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருந்து எங்களுடைய சுகாதார துறைக்கு உடனடியாக அறியத் தரும் பட்சத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் எங்கள் நாட்டுக்குள் இந்த கொரோனா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம் என்பதை நாங்கள் மக்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.– என மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் றோய் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir
வாகன நெரிசல்
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி
நாளைய (08.06.2020) தலைப்பு
வாகன நெரிசல்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கையில் உண்டா?

கலாநிதி.கந்தையா பகீரதன்


கடந்த நான்கு மாதங்களாக இலங்கையை உலுக்கிஎடுத்துப் பெரிய நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்திய கொரோனாவின் தாக்கம் சற்றுக் குறைவடைகின்ற வேளையில் பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கைக்குள் வருமா, வந்து இலங்கையின் உணவு உற்பத்தியில் தாக்கத்தை விளைவித்து உணவுப் பஞ்சத்தையும் பட்டினியையும் ஏற்படுத்துமா என்ற கவலையில் இலங்கை மக்களும் குறிப்பாக விவசாயப் பெருமக்களும், விவசாயத் துறை சார்ந்தவர்களும் இருக்கின்ற வேளையில், இந்தக் கட்டுரையானது பாலைவன வெட்டுக்கிளிகள் பற்றிய விளக்கத்தை அளிப்பதற்காக எழுதப்படுகிறது.

### பாலைவன வெட்டுக்கிளிகள் என்றால் என்ன?

பாலைவன வெட்டுக்கிளிகள் Desert locust (Schistocerca gregari) என்பவை சிறிய உணர்கொம்புகளைக் கொண்ட வெட்டுக்கிளிக் குடும்ப (Family: Acrididae) அங்கத்தவர்கள். ஆனால் பாலைவன வெட்டுக்கிளி இனம் மற்றைய வெட்டுக்கிளிக் குடும்ப அங்கத்தவர்களுடன் வேறுபடுகின்றன. காரணம், பாலைவன வெட்டுக்கிளிகள் தமது நிறம், நடத்தை, உருவம் என்பவற்றைத் தமது எண்ணிக்கை மற்று காலநிலை மாறும்போது மாற்றக் கூடியவை. அதாவது, இவற்றின் எண்ணிக்கை குறைவாக இருக்கும்போது இவை தனியாகவும் , இளம் கரும் பச்சை நிறத்திலும் இருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது கபிலநிறமாக மாறுவதோடு மட்டுமல்லாது, கூட்டமாகவோ அடர்த்தியான நிறையுடலி திரள் அல்லது அணுங்குப் படை ஆக இவை மாறிப் பறந்தோ அல்லது நடந்தோ இடம் விட்டு இடம் பெயரும் திறன் கொண்டவை. இந்த நடத்தை, உடலியல் மற்றும் உருவ மாற்றத்தை நாம் மற்றைய வெட்டுக்கிளிகளிடம் அவதானிக்க முடியாது.

பாலைவன வெட்டுக்கிளிகள் பெரும்பாலும் ஆபிரிக்க, அரேபிய, மேற்கு மற்றும் தென் ஆசியாவின் வறண்ட சில பிரதேசங்களில் அதிகம் வாழ்வதாலும், வெப்பமான மற்றும் மிகக் குறைந்த மழைவீழ்ச்சி கிடைக்கும் இடங்களில் வாழ்ந்து, மழைவீழ்ச்சி கிடைக்கும்போது இனத்தைப் பெருக்குவதாலும், காலத்துக்குக் காலம் கூட்டம் கூட்டமாகக் குடிபெயர்வதாலும் இந்தப் பெயர் கொண்டு இவை அழைக்கப்படுகின்றன.


**படம் 1:** பாலைவன வெட்டுக்கிளி தனியாக, குழுவாக மாறும் நடத்தை மாற்றம்




### ஏன் பாலைவன வெட்டுக்கிளிகள் ஆபத்தானவை?

பாலைவன வெட்டுக்கிளிகள் தனித்து இருக்கும்போது ஆபத்து மிகவும் குறைவு. ஆனால் இவை கூட்டமாகச் சேரும்போது தமது குணத்தை மாற்றிக் கொண்டு, நீண்ட இறகு முளைத்துப் பெரும் பசியுடன் பறந்து செல்லும் வேட்டைப் படையாக மாறும். செல்லும் இடமெல்லாம் பேரழிவை ஏற்படுத்தித் தனது இனத்தைப் பெருக்கி உணவுதேடிச் சென்றுகொண்டே இருக்கும். ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவில் பரந்து இருக்கும் ஒரு பாலைவன வெட்டுக்கிளிக் கூட்டத்தில் கிட்டத்தட்ட 150 தொடக்கம் 10ஆயிரம் மில்லியன் வெட்டுக்கிளிகள் வரை இருக்கும். இவை குடிபெயரும் காலங்களில் பல கூட்டங்களாகி நகர்வதோடு மட்டுமல்லாது ஊடுருவும் இடங்களில் இருக்கும் எல்லா விதமான தாவரங்களினதும், பயிர்களினதும் அனைத்துப் பசுமையான பகுதிகளையும் அசுரவேகத்தில் உண்டு ஏப்பமிட்டுத் தொடர்ச்சியாக ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 150தொடக்கம் 400 கிலோமீற்றர் தூரம் வரை காற்றின் உதவியுடன் பயணம் செய்யக்கூடியன. ஒரு வெட்டுக்கிளியால் தனது எடைக்குச் சமனான உணவை ஒரு நாளைக்கு உண்ணமுடியும். ஒரு பாலைவன வெட்டுக்கிளிப்படை ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவில் பரந்து இருக்கும் போது ஒரு நாளைக்கு 35ஆயிரம் மனிதர்கள் சாப்பிடக்கூடிய உணவுக்குச் சமனான எடையுள்ள பயிர்களைத் தின்று அழித்துவிடும். அது மட்டுமன்றி மூன்று மாதங்களில் 20 மடங்காகவும், ஆறு மாதங்களில் 400 மடங்காகவும், ஒன்பது மாதங்களில் 8ஆயிரம் மடங்காகவும் பெருகும் ஆற்றல் இந்தப் படைக்கு உண்டு. இதனால்தான் இதன் வருகையைக் கேட்டு உலகமே கலக்கத்தில் இருக்கிறது,. இவற்றால் ஏற்படப்போகும் பயிர் சேதத்தால் உலகத்தில் உள்ள பத்தில் ஒரு பகுதி மக்களுக்கு உணவு கிடைக்காமல் போகும் அபாயமுள்ளது.

## குழப்பங்களும் விளக்கங்களும்




(படம் 2)

படம் 2: பாலைவன வெட்டுக்கிளியின் வாழ்க்கை வட்டம் மற்றும் பெண் ஆண் வேறுபாடு

### பாலைவன வெட்டுக்கிளிகளின் வாழ்க்கை வட்டம்

பாலைவன வெட்டுக்கிளிகளின் வாழ்க்கை வட்டம் மூன்று முதன்மை அவத்தைகளைக் கொண்டது. முட்டை, அணுங்கு, நிறை உடலி. ஆண் – பெண் இனச்சேர்க்கையின் பின்னர், பெண் வெட்டுக்கிளியானது சொகுசான மற்றும் ஈரப்பதன் கலந்த மண்ணில் தனது வயிற்றின் பின்புறமாக உள்ள கூரான பகுதியால் 10தொடக்கம் 15 சென்ரி மீற்றர் ஆழத்துக்கு மண்ணைக் கிண்டி 3தொடக்கம்4 சென்ரிமீற்றர் நீளமான 80தொடக்கம் 160 முட்டைகளைக் கொண்ட முட்டைக் குடுவையை உருவாக்கும். முட்டைகளின் எண்ணிக்கை சூழல் வெப்பநிலை மற்றும் ஈரப்பதனின் அடிப்படையில் மாறுபடும். சராசரியாக ஒரு பெண் வெட்டுக்கிளி தனது வாழ்க்கைக் காலத்தில் இரண்டு முட்டைக் குடுவைகளை இடும். இவை முட்டை இடும்போது வெளிவிடும் இரசாயனப் பதார்த்தங்கள் மற்றைய பெண் வெட்டுக்கிளிகளையும் அதை அண்மித்த பிரதேசங்களில் முட்டையிடத் தூண்டும். இதனால் ஒரு சதுர மீற்றர் பரப்பளவில் கிட்டத்தட்ட ஆயிரம் வரையான முட்டைக் குடுவைகளை அவதானிக்கலாம். முட்டையில் இருந்து வெளிவரும் அணுங்குகள் நான்கு அவத்தைகளின் ஊடாக உருமாறி நிறை உடலி வெட்டுக்கிளியாக மாறும்.

**(படம் 2)**


வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்தி செய்யும்காலம்தட்ப வெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப 40 நாள்கள் தொடக்கம் 6 மாதங்கள் வரை வேறுபடும். ஆண் மற்றும் பெண் வெட்டுக்கிளிகளை அவற்றின் உருவவியலின் அடிப்படையில் வேறுபடுத்தலாம்.

### பாலைவன வெட்டுக்கிளிகளின் பரம்பல்


பாலைவன வெட்டுக்கிளிகள் பொதுவாக ஆபிரிக்கக் காடுகளில் மற்றும் அரேபியப் பாலைவனங்களில் அதிகமாக வாழ்கின்றன. தொடர்ச்சியான வறட்சியின் பின்னர் அரேபியப் பாலைவனங்களில் 2018ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பல சூறாவளிகள் ஏற்படுத்திய தொடர் மழையால், மூன்று தடவைகள் முழு அளவில் இனம் பெருகின பாலைவன வெட்டுக்கிளிகள். பின்னர் உணவுதேடிக் கிழக்கு ஆபிரிக்க நாடுகளான ஏமனுக்கும்; ஈரானுக்கும் 2019ஆம் ஆண்டு தை மாதத்தில் சென்றடைந்தன. பின்னர் ஏமனில் இருந்து சோமாலியாவுக்குப் பரவிப் பல கூட்டங்களாக அண்டை நாடுகளான கென்யா, உகண்டா, எதியோப்பியா மற்றும் சூடன் ஆகிய நாடுகளுக்குப் பரவின. எதியோப்பியாவில் இனம் பெருகி எதியோப்பியாவில் இருந்து ஏமன் சென்று அங்கேயும் நாசத்தை ஏற்படுத்திப் பின்னர் செங்கடலைக் கடந்து அரேபியத் தீபகற்பத்தின் உடாக ஆசியா கண்டத்தின் ஈரானுக்குள் கடந்த சித்திரை மாதத்தில் நுழைந்தன. இவ்வாறு இவை பல்கிப் பெருகுவதற்கு முக்கிய காரணம் மோசமான காலநிலை மாற்றம் (எதிர்பாராத வறட்சி, அதிகளவான மழைவீழ்ச்சி மற்றும் செயற்கைப் பாலைவனப் பசுமையாக்கல்). பின்னர் ஈரான் ஊடாக இந்திய மற்றும் பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் உள்ள பஞ்சாப் மாநிலத்தில் குடிகொண்டு அங்கே பல மில்லியன் ரூபா பெறுமதியான பயிர் இழப்பை ஏற்படுத்தியும் தமது இனத்தைப் பெருக்கியும் பின்னர் இந்தியாவின் வடமாநிலங்காலான ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஹரியானா மற்றும் குஜராத்திலும் தற்போது தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றன.

(8 ஆம் பக்கம் பார்க்க...)

# பாலைவன வெட்டுக்கிளிகள்....




(படம் 3)




(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கு காரணம் வாட மாநிலங்களில் இப்போது பருவமழை ஆரம்பித்ததே.

### பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கைக்குள் வருமா?

இனிவரும் வாரங்களில் நிகழ இருக்கும் பருவமழை மாற்றத்தால் தற்போது ஆபிரிக்காவில் உள்ள வெட்டுக்கிளிகள் மேற்கு ஆபிரிக்காவை நோக்கியும், ஆசியாவில் உள்ளவை மீண்டும் இந்தியாவின் வட மாநிலமான ராஜஸ்தான் ஊடாக அரேபியப் பாலைவனங்களை அல்லது ஆபிரிக்காவைச் சென்றடையலாம் என ஐ.நாவுக்கான பன்னாட்டு உணவு மற்றும் விவசாயத்துக்கான நிறுவனத்தின் பாலைவன வெட்டுக்கிளி முன் அறிவித்தல் நிறுவகம் தெரிவித்துள்ளது. (படம் 3)

இதுவரை இந்தியாவின் எந்தவொரு தென் மாநிலங்களுக்கோ அயல் நாடுகளான பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கைக்கோ அபாய எச்சரிக்கையை இந்த முன்னறிவித்தல் நிலையம் விடுக்கவில்லை. இதனால் இலங்கைக்கு இவற்றின் தாக்கம் மிகவும் குறைவு அல்லது இல்லை என்றே சொல்லலாம். இருந்தாலும் அனுமானிக்க முடியாத காலநிலை மாற்றங்கள் (புயல் மற்றும் தாழமுக்கத்தால் உருவாகும் மழை) பாலைவன வெட்டுக்கிளிகளை தென் இந்தியாவை நோக்கித் திருப்பினால், அவை இலங்கை நோக்கித் திரும்புவதற்கான சாத்தியங்களும் உண்டு.

### இப்போது தாக்கும் வெட்டுக்கிளிகள் யாவை?

பாலைவன வெட்டுக்கிளிகளின் தாக்கம் குறித்த செய்திகள் வெளியாகியதில் இருந்து இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் குறிப்பாகக் குருநாகல், கிளிநொச்சி விவசாயிகள் கலக்கத்துடன் தமது தோட்டங்களை அவதானித்த வண்ணம் இருப்பதோடு மட்டும் அல்லாமல், தங்கள் தோட்டங்களில் தற்போது பெருகி இருக்கும் தோட்ட வெட்டுக்கிளி இனங்களைப் பாலைவன வெட்டுக்கிளிகளாகக் கருதி விவசாயத்துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவித்தவண்ணம் இருக்கின்றார்கள். இப்போது தாக்கத்தை ஏற்படுத்துபவை தோட்ட வெட்டுக்கிளி வகை. வெயிலின் பின்னர் பெய்த மழையின் காரணமாக, தோட்ட வெட்டுக்கிளிகள் சற்றுப் பெருகி உள்ளன. இவை பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தாதவை, இருந்தாலும், விவசாயிகள் விவசாயத் திணைக்களம் வழங்கியுள்ள தொலைபேசி எண் 1920 அல்லது விவசாய உயிரியல் துறை, விவசாய பீடம், அறிவியல் நகர், கிளிநொச்சி (தொலைபேசி எண் 0212060171) தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களையும் உதவிகளையும் பெறலாம்.


### பாலைவன வெட்டுக்கிளிகளின் தாக்கமும் பட்டினியும்


பாலைவன வெட்டுக்கிளிகள் புதியவை அல்ல. பல நூற்றாண்டுகளாகக் காலத்துக்கு காலம் உலகின் பல்வேறு நாடுகளில் கடுமையான பயிர்ச் சேதங்களையும் உணவுப் பஞ்சங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றன. இவற்றின் தாக்கம் குறித்து சமய நூல்களில் கூட குறிப்பிடப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் மாத்திரம் ஏழுமுறை இவை (1926 – 1934, 1940 – 1948, 1949 – 1963, 1967 – 1969, 1987 – 1989, 2003 – 2005, 2019 – 2020) படையெடுப்புக்களை மேற்கொண்டு அழிவுகளை ஏற்படுத்தி இருக்கின்றன. தற்போது நிலவும் படை எடுப்பு 2018ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தப் படையெடுப்பால் கடந்த சித்திரை 2020 வரை 2.25 மில்லியன் ஹெக்ரெயர் பயிர் நிலங்கள் அழிக்கபட்டுள்ளன, இதனால் எதியோப்பியா, கென்யா, சோமாலியா, தென் சூடான், உகண்டா மற்றும் தன்சானியாவைச் சேர்ந்த கிட்டத்தட்ட 20.2 மில்லியன் மக்கள் பட்டினிக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். 2020ஆம் ஆண்டின் படையெடுப்பு கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத மிகமோசமான அழிவுகளை ஏற்படுத்தப் போவதாக ஐ.நாவுக்கான பன்னாட்டு உணவு மற்றும் விவசாயத்துக்கான நிறுவனம் எச்சரித்துள்ளது.

> “இப்போது தாக்கத்தை ஏற்படுத்துபவை தோட்ட வெட்டுக்கிளி வகை. வெயிலின் பின்னர் பெய்த மழையின் காரணமாக, தோட்ட வெட்டுக்கிளிகள் சற்றுப் பெருகி உள்ளன.”

### கட்டுப்படுத்துவதற்கான செலவு அதிகம்

இந்த வெட்டுக்கிளிப் படையைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு 60தொடக்கம் 500 மில்லியன் டொலர்கள் வரையாகும் என்று ஐ.நாவுக்கான பன்னாட்டு உணவு மற்றும் விவசாயத்துக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட நாடுகளிடம் இவ்வளவு பணம் இல்லாத காரணத்தால், பல தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களிடம் இருந்து உதவி கோரப்பட்டுள்ளது. இந்த வெட்டுக்கிளிப் படையைக் கட்டுப்படுத்தாவிட்டால் ஆபிரிக்காவை மீளக்கட்டி எழுப்புவதற்கு 1 பில்லியன் டொலர் வரை தேவை ஏற்படும் என ஐ.நாவுக்கான உலக உணவு உதவித் திட்டம் எச்சரித்துள்ளது. உலக வங்கியின் கருத்துப்படி தற்பொழுது ஆபிரிக்காவில் மட்டும் 90 மில்லியன் ஹக்ரெயர் பயிர் நிலங்கள் வெட்டுக்கிளிகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலையில் உள்ளதாகவும், அந்தப் பயிர் நிலங்கள் அழிக்கப்பட்டால் அடுத்த ஆண்டில் 9 பில்லியன் டொலர் வரை இழப்பு ஏற்படும் எனவும் முன்னறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.




### கட்டுப்படுத்துவது சாத்தியமா?

பாலைவன வெட்டுக்கிளிகள் பல்கிப் பெருகுவது மட்டுமல்லாமல் அனைத்துப் பயிர் மற்றும் தாவரங்களையும் தாக்குவதால் இவற்றைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம். இதற்காகத்தான் 1920ஆம் ஆண்டில் இருந்தே வெட்டுக்கிளி முன் எச்சரிப்பு – தந்திரோபாயம் முறையில் வருமுன் காப்போம் உத்திகள் பாதிக்கப்பட்ட நாடுகளால் பின்பற்றப்படுகின்றன.

இந்த உத்திகளின் அடிப் படையில் ஐ.நாவின் உணவு மற்றும் விவசாயத்துக்கான நிறுவனம் பாலைவன வெட்டுக்கிளிகள் தகவல் சேவையை வெட்டுக்கிளி அவதானிப்பு இணையத்தளத் தின் ஊடாக வழங்குவதோடு மட்டுமல்லாது வெட்டுக்கிளிகளின் நடமாட்டம், அவை எந்த நாடுகளை நோக்கி செல்லப் போகின்றன போன்ற செயற்கைக் கோள் மூலம் பெறப்பட்ட துல்லியமான தகவல்களை முன்கூட்டியே அந்த நாடுகளுக்கு அறிவிப்பதால் அந்த நாடுகள் இந்த வெட்டுக்கிளிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தயார் நிலையில் இருக்கும். வெட்டுக்கிளிப்படை வரும் சந்தர்ப்பத்தில் வானூர்தி மூலமும் தீ அணைப்பு உபகணரங்கள் மூலமும் பூச்சி நாசினிகளை விசிறிக் கட்டுப்படுத்துகின்றன.

### கொல்வதில் சிக்கல்

பாலைவன வெட்டுக்கிளிகள் மிகவும் உறுதியான உடலமைப்பைக் கொண்டிருப்பதால் இவற்றைக் கொல்வதற்கு organophosphate வகையைச் சேர்ந்த டியாசிநோன் ( Diazinon) மலத்தியோன் (Malathion), பநிற்றோதியோன் (Fenitrothion) , குலோரிப்யரிபோஸ் (chlorpyrifos) போன்ற தடை செய்யப்பட்ட பூச்சி நாசினிகளே பயன்படுத்த படக்கூடியவை. இந்தப் பூச்சி நாசினிகள் இயற்கைக்கும் மற்ற உயிரினங்களுக்கும் மிகவும் கேடுவிளைவிப்பவை. ஆனாலும் கூட மிகவும் இக்கட்டான சூழ் நிலைகளில் மாத்திரம் தேவையான அளவில் பயன்படுத்த அனுமதி வழங்கப்படலாம்.

பூச்சி நாசினிகள் தவிர உரத்த ஒலி எழுப்புதல் மூலம் இவற்றை விரட்டி அடிக்கலாம் என்றும் பலவிதமான உயிரியல் கட்டுப்பாடு முறைகள் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்தலாம் என்று பல ஆய்வுகள் இருந்தாலும், வெட்டுக்கிளிகள் பெருகும் இடங்களில் அவற்றின் முட்டைகளை மற்றும் இறகு முளைக்காத அணுங்குகளை நவீன தொழில் நுட்பங்கள் மூலம் (satellite or drone camera watch) இனங்கண்டு முற்றாக அழித்தல் மாத்திரமே பட்டினியில் இருந்து நாம் பாதுகாப்பாக இருக்கலாம். ஒரு புது முயற்சியாகச் சீனா ஒரு இலட்சம் தாராக்களைப் பாகிஸ்தான் இந்தியா எல்லைக்கு அனுப்பி வெட்டுக்கிளிகளின் முட்டைகள் மற்றும் இறகு முளைக்காத அணுங்குகளைத் தாராக்களுக்கு இரையாக்கிக் கட்டுப்படுத்த முயல்கின்றது. வெற்றி கிடைக்குமா? பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும். அரசன் அன்று கொள்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது போய், இந்த வெட்டுக்கிளி மற்றும் கொரோனாத் தொற்றின் தாக்கம் இயற்கையைக் குழப்பியதால் மனிதனுக்கு இயற்கையால் ஏற்படுகின்ற ஆபத்தாக மாறியுள்ளது.

**‘இயற்கையாய் வாழ்வோம். இயன்றவரை இயற்கையுடன் ஒன்றினைந்து வாழ்வோம்’**

கட்டுரையாளர் – தலைவர், விவசாய உயிரியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்,
அறிவியல் நகர், கிளிநொச்சி

# இந்தியாவில் இருந்து தந்தையும் மகளும் எப்படித் தப்பி வந்தனர்?

## ஓர் அலசல்


பேசாலைக் கடற்கரையில் தேடுதல் நடத்துகிறார்கள் காவல்துறையினர்

மடு காவல்துறை நிலையத்திற்கு வைகாசி (மே) மாதம் 29ஆம் நாள் வருகை தந்த ஒரு தந்தையும் மகளும் தாம் இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கிறோம் என்று தெரிவித்தார்கள்.

அவர்களை ஏறஇறங்கப் பார்த்த அங்கிருந்த காவலர்கள் இவர்களுக்குப் பைத்தியம் கிய்த்தியம் பிடித்துவிட்டதா என்று உள்ளூர நினைத்துக்கொண்டே அவர்களை ஓர் ஓரமாக அமரச் சொன்னார்கள்.

சிறிது நேரத்தின் பின்னர் அவர்களை அழைத்து அவர்களின் முறைப்பாட்டைப் பதிவு செய்ய முற்பட்டபோதே நிலமையின் விபரீதத்தைப் புரிந்துகொண்டனர் காவலர்கள்.

உடனடியாக அதிகாரிகளுக்குத் தகவல் தரப்பட்டது.

அவர்களும் விரைந்து வந்து விசாரணையில் சேர்ந்துகொண்டார்கள்.

அந்த இருவரும் இந்தியாவில் இருந்து முதல் நாள்தான் பேசாலைக் கரையை வந்தடைந்திருக்கிறார்கள்.

அதிவேக குதிரைவலுக் கொண்ட இயந்தரம் பூட்டிய படகில் தாம் அழைத்து வரப்பட்டனர் என அவர்கள் கூறினார்கள்.

இப்போது அதிகாரிகளுக்கு உள்ளூற நடுக்கமும் பிடித்துக்கொண்டது. அவர்களிடமிருந்து சற்றுத் தூரத்திற்கு விலகிச் சென்றார்கள்.

திடீரென அவர்களுக்கு சமூக இடைவெளியின் அவசியம், தேவை எல்லாம் புரிந்தது.

இரண்டு நாள்களின் பின்னர் இந்தியாவில் இருந்து வந்த இந்த இருவரும் அங்கு கொரோனா அதிகளவில் பரவுவதால் அதற்குப் பயந்து இலங்கைக்குத் தப்பியோடி வந்துவிட்டார்கள் என்று செய்திகள் வெளியானதன் பின்னணியை இதிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.

காவலர்கள் முன்பாக அமர்ந்திருந்த ஆண் 33 வயதான யேசுதாசன் புலேந்திரன்.

அவர் அருகிலேயே அவரது இளைய மகள் 8 வயதான புலேந்திரன் சபிக்சா.

அவர்கள் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஈழ அகதிகள் முகாமில் இருந்து பேசாலையை வந்தடைந்திருந்தார்கள்.

காவலர்களுக்கு இப்போது இரண்டு பிரச்சினை. முதலாவது அவர்கள் நாட்டின் குடிவரவு குடியகல்வுச் சட்டதிட்டங்களை எல்லாம் மீறி களவாக நாட்டுக்குள் புகுந்திருக்கிறார்கள்.

இதற்காக அவர்களைத் தண்டிக்கவேண்டும்.

அதேநேரத்தில் இந்தியாவில் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதால் கூடவே கொரோனா தொற்றையும் சேர்த்தே கொண்டுவந்திருப்பார்களோ என்கிற அச்சம் இரண்டாவது பிரச்சினை.

களவாக நாட்டுக்குள் வந்ததைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம், முதலில் இவர்களை கொரோனா சோதனைக்கு அனுப்புவதே புத்திசாலித்தனம் என்று நினைத்த அதிகாரிகள் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்போடு அவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.



கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகின் வெளி இணைப்பு இயந்திரம் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

தந்தையும் மகளும் மட்டக்களப்பு புனானையில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டார்கள். கூடவே புலேந்திரனின் தகப்பனான யேசுதாசனும் புனானைக்கு அனுப்பப்பட்டார்.

புலேந்திரனும் அவரது மகளும் இந்தியாவில் இருந்து பேசாலைக்கு வந்து இறங்கியதும் நேரடியாக யேசுதாசன் வீட்டிற்குச் சென்றே தங்கியிருந்தனர்.

அதனாலேயே அவரும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார்.

கடல் கடந்து எப்படி வந்தார்கள்?

அவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைத்த பின்னர்தான் காவல்துறையினர் அவர்கள் எப்படி இந்தியாவிலிருந்து வந்து இலங்கைக்குள் சத்தம் சந்தடியின்றி நுழைந்தார்கள் என்கிற விசாரணையில் குதித்தது.

இந்தியாவில் இருந்து வந்த புலேந்திரனின் தகப்பனாரான யேசுதாசன் பண்டிவிரிச்சானில் வாழ்ந்து வருகிறார்.

குடும்பப் பிணக்கில் மனைவியையும் மூத்த மகளையும் பிரிந்துவிட்ட புலேந்திரன் உடனடியாக இலங்கைக்கு வர விரும்பி பண்டிவிரிச்சானில் இருந்த தந்தையை அணுகினார்.

உடனடியாக மகனை இலங்கைக்கு அழைத்து வர விரும்பிய யேசுதாசனும் இதற்காக வங்காலையைச் சேர்ந்த ரொசான் சில்வாவை அணுகினார்.

அவர் பேசாலை காட்டாஸ்பத்திரிப் பகுதியைச் சேர்ந்த சந்திரன் சுகிர் என்பவரை அறிமுகப்படுத்திவிட்டார்.

சுகிர் பேசாலை 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜோன் கிரேசியனைத் தொடர்புபடுத்திவிட்டார்.

தமிழ்நாட்டில் இருந்து இருவரையும் அழைத்து வருவதற்கு 3 லட்சத்து 300 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று தெரிவித்தார்.

யேசுதாசனும் அதற்கு இணங்கி 2 லட்சம் ரூபாய் முற்பணமும் வழங்கினார்.

இதையடுத்து இருவரையும் அழைத்துவரும் பொறுப்பை பேசாலை 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அசோக் தீபனிடம் ஒப்படைத்தார் கிரேசியன்.

இந்தியக் கரையில் இருந்து நடுக் கடல் வரை தகப்பனையும் மகளையும் இந்தியாவைச் சேர்ந்த கடலோடிகளோடு பேசி ஏற்பாடுகளைச் செய்தார் கிரேசியன்.

பயணத் திட்டம் எல்லாம் தயாராகியதும் வைகாசி 28ஆம் நாள் இருவரையும் இலங்கைக்குக் கடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

கடத்தல் பணி ராஜா மற்றும் அசோக் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆட்களைப் பரிமாறுவதற்கான ஆள்கூறுப் புள்ளியும் (ஜி.பி.எஸ்) அவர்களிடம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு கரையிலிருந்து புறப்பட்டு நடுக்கடலிற்கு வந்து சேர்ந்த தந்தையையும் மகளையும் தமது நடுக் கடலில் பொறுப்பேற்ற ராஜா அசோக் இருவரும் திட்டமிட்டபடி கச்சிதமாக இருவரையும் பேசாலைக் கடற்கரையில் பக்குவமாக இறக்கிவிட்டனர்.

மறுநாள் புலேந்திரன் சபிக்சா இருவரும் மடு காவல் நிலையம் சென்று சரணடைந்தனர்.

உஷாரடைந்த காவலர்கள் தேசிய புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் பேசாலையில் இது தொடர்பான விசாரணைகளைத் தொடக்கினர்.

சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதற்கு மன்னார் நீதிவானின் அனுமதியையும் பெற்றுக்கொண்டனர்.

40 குதிரை வலுக் கொண்ட படகு வெளியிணைப்பு இயந்திரம் ஒன்று படகு ஒன்று என்பவற்றைக் கைப்பற்றியது.



கடத்தலில் சங்கிலித் தொடராகச் சிக்கிக்கொண்ட 6 பேரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பேசாலையில் புலேந்திரனின் உறவினர்கள், அயல வர்கள் அனைவரும் வீடுகளிலேயே கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

# திருட்டுச் சந்தேகநபர்கள் இருவர் நேற்றுக் கைது

## சம்மாந்துறை கடையில் பணம் களவு தொடர்பில்

ஆடைக் கடை ஒன்றில் பணத்தைத் திருடிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரை சம்மாந்துறைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவரும் 18, 19 வயதுடைய இளைஞர்கள்.

சம்மாந்துறை பௌசி மாவத்தையில் கடந்த மாதம் 18ஆம் திகதி நடந்த திருட்டுத் தொடர்பாகவே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிகளின் நோன்பு திறக்கும் நேரத்தை பயன்படுத்தித் தமது கடையின் காசு வைக்கப்படும் லாச்சியில் இருந்து ரூபா 85 ஆயிரத்தை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் திருடிச் சென்றுவிட்டனர் என்று உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

நடவடிக்கை எடுத்த பொலிஸார் சம்மாந்துறையைச் சேர்ந்த இருவரை நேற்று சனிக்கிழமை மாலை கைது செய்தனர்.

கடையில் இருந்து பணத்தை களவாடிக்கொண்டு தப்பிச் செல்ல பயன்படுத்தியதாகக் கருதப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் 1 கிராம் 160 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக அக்கரைப்பற்று, கல்முனை பொலிஸ் நிலைங்களில் வேறு பல முறைப்பாடுகளும் உள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கொழும்பு பொது நூலகம் நாளை முதல் திறப்பு

*கொழும்பு பொது நூலகம் பொது மக்கள் பாவனைக்காக நாளை முதல் மீண்டும் திறக்கப்படுகிறது.*

*காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரவல் வழங்கும் பகுதி மற்றும் உசாத்துணைப் பகுதி திறக்கப்படவுள்ளன.*

*பத்திரிகை, கால அட்டவணை, சிறப்பு குறிப்பு, ஆய்வு மண்டபம், கொரியா மற்றும் குமாபல் நூலக பிரிவுகள் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் மூடிய நிலையில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*நூலக அதிகாரிகள் மக்களைச் சுகாதார நடைமுறைகளை பேணியவாறு நூலக வசதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.*

# புத்தளத்தில் உள்ள முஸ்லிம்களுக்கும் ரூ. 5,000 அரச உதவியை வழங்குங்கள்

## பிரதமர் மஹிந்தவிடம் முன்னாள் அமைச்சர் ரிஷாத் கோரிக்கை

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு, கொரோனா இடர் கால நிதியுதவியான 5 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கொடுப்பனவைப் புத்தளத்திலுள்ள மக்கள் பெறுவதற்குத் தடையாக இருப்பவர்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி, அதனை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டியுள்ளார்.

பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

கொரோனா தொற்றினால் நாட்டில்



நிர்வாக முடக்கல் ஏற்பட்டதினால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதன்போது அரசாங்கம் நாட்டு மக்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவை முதற்கட்டமாக வழங்கியது. இந்த கொடுப்பனவை வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் புத்தளம், கல்பிட்டி, முந்தல், வண்ணாத்தவில்லு உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவில் வாழும் மக்களுக்கு வழங்குவதில் இழுபறி நிலை காணப்பட்டது.

அதனையடுத்து, 'வடக்கு இடம்பெயர்ந்த மக்களின் அமைப்பு' எடுத்துக் கொண்ட முயற்சியினால், வடக்கில் இந்தக் கொடுப்பனவை பெறாத நிலையில், புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு இதனை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இன்னும் அவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இந்த மக்களுக்கு வழங்குவதற்கான நிதி தமக்கு விடுவிக்கப்படவில்லை என்று மன்னார் மாவட்டச் செயலர் கைவிரித்துள்ளார்.

இந்த நிதியினை வழங்காமல் தடுக்கும் செயற்பாடுகள் ஏதும் இடம்பெறுமெனில் அதனைக் கவனத்திற்கொண்டு, இடம்பெயர்ந்த நிலையில் வாழும் இம்மக்களுக்கு அரசின் இந்த உதவித் தொகையினை பெற்றுக்கொடுக்க, நாட்டின் பிரதமர் என்ற வகையில், தேவையான பணிப்புரையினை அரச அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் - என்று அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்தார்.

# மட்டு. நகரில் இருந்து கொழும்புக்கு நாளை காலை 6.10 மணிக்கு ரயில்

(க.விஜயரெத்தினம்)

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி நாளை காலை 6.10 மணிக்கு ரயில் இடம்பெறவுள்ளதாக மட்டக்களப்பு ரயில் நிலைய அதிபர் ஏ.யூ.என்.நுவைஸ் தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் ரயில் சேவைகள் முழுவதும் நிறுத்தப்பட்டன. நாளை முதல் அவை வழமைக்குத் திரும்பும் என்று ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் போக்குவரத்திற்கு விதிக்கப்பட்டிருந்த வரையறை தளர்த்தப்பட்டுள்ளதால் திங்கட்கிழமை முதல் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் கொழும்பு நோக்கி பயணிக்க முடியும் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, சில ரயில்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் நேர அட்டவணைக்கு அமைவாக நடக்கும் என்று ரயில்வே திணைக்களத்தின் மேலதிக பொது முகாமையாளர் வி.ஏ.சி பொல்வத்தகே தெரிவித்துள்ளார்.

# மினுவாங்கொடையில் 50 வயது நபரை இன்று சுட்டுக் கொன்றது பொலிஸ்

## பாதாள உலகக் குழுவின் தலைவர் என்றும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 06

மினுவாங்கொடயில் சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் இன்று சுட்டுக் கொன்றனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் கல்கிஸ்ஸ – சொய்சாபுர பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் மீது வாகனத்தில் இருந்தபடி துப்பாக்கிச் சூடு நடத்திய பிரதான சந்தேகநபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கப்பம் கேட்டு வழங்காததால் உணவக உரிமையாளரை மிரட்டுவதற்காக இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

கொனே கோவிலே ராஜா என்று அழைக்கப்படும் ராஜா விமலதர்ம என்பவரே கொல்லப்பட்டவர். இவர் பாதாள உலகக் குழுத் தலைவர் என்று பொலிஸார் கூறினர்.

குறித்த சந்தேகநபர் மினுவாங்கொட பகுதியில் தலைமறைவாகி இருக்கிறார் என பேலியகொட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அதிகாலையில் அங்கு சென்ற பொலிஸாரை நோக்கி சந்தேகநபர் சுட்டதால் தாம் பதில் தாக்குதல் நடத்தவேண்டி ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்த சந்தேக நபர் திவுலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

திவுலபிட்டிய பல்லபான பகுதியை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட 50 வயதுடைய நபரே கொல்லப்பட்டவர். இவர் மீது பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவம் தொடர்பாக பேலியகொட குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் களனிய குற்ற விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இனிமேலாவது இறைவழிபாட்டுக்கு அனுமதிக்க கர்தினால் கோரிக்கை

இறை வழிபாடுகளில் ஈடுபட அனுமதி வழங்குமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா காரணமாக முடக்கப்பட்டிருந்த இலங்கை தற்போது வழமைக்கு திரும்பி வரும் நிலையில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டங்கள் மற்றும் சுகாதார நடைமுறைகளின் படி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் வழிபாட்டு நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்குமாறு அவர் தனது வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

நாளாந்த ஆராதனைகளை நடத்தவும் அனுமதிக்க வேண்டும் என்பது அவரது வலியுறுத்தல். கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் அடையாளம் காணப்பட்ட நாள் முதல் வீட்டிலிருந்தே பிரார்த்தனைகளை மேற்கொள்ளுமாறு கிறிஸ்தவ மக்கள் வேண்டப்பட்டிருந்ததற்கு அமைய மக்கள் செயற்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.


## விநியோக ஆள் தேவை

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்திற்கு, பொருள்கள் விநியோகம் செய்வதற்கு ஆள்கள் தேவை.

தகைமை :

* மோட்டார் சைக்கிள்
* சாரதி அனுமதிப்பத்திரம்



நேர்முக தேர்வு 08.06.2020 காலை 10.00 மணிக்கு "செம்பா சேர்விஸ்சஸ்" 551A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 077 411 4422


# காணாமலாக்கப்பட்டோர் சங்கம் மொட்டை ஆதரிப்பதற்கு முடிவு





எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியும் பொதுஜன பெரமுன (மொட்டுக் கட்சி) வேட்பாளரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்கும் ஆளுமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கே உள்ளது என்ற நம்பிக்கையில் இந்த ஆதரவு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பெரமுனவின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் மருத்துவர் திலக ராஜபக்ஷவுக்கே பொதுத் தேர்தலில் தமது ஆதரவு என்று அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவியும் மகளிர் உரிமை செயற்பாட்டாருமான எஸ்.புவனேஸ்வரி தெரிவித்தார்.

அம்பாறை திருக்கோவில் விநாயகபுரத்தில் எஸ்.புவனேஸ்வரியின் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை வேட்பாளர் மருத்துவர் திலக ராஜபக்ஷவை ஆதரித்து இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இந்தத் தீர்மானத்தை அறிவித்தார்.

தமது அமைப்பு இது தொடர்பில் ஒரு மனதான தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷவின் நேரடிப் பிரதிநிதியாகப் போட்டியிடுகின்ற மருத்துவர் திலக் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலமே பொருத்தமான உரிய தீர்வை அடைய முடியும் என்று சங்கம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் புவனேஸ்வரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.06.2020 இல் வெளியிடப்பெற்றது.